**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**முன்னிலை: திருமதி.S.சுசீலா, பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம்**

**2025-ம் வருடம் அக்டோபர் மாதம்-08 ம் நாள் புதன்கிழமை**

**(2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் புரட்டாசி மாதம் 22-ம் நாள்)**

**இ.ம.எண்.9/2025 மற்றும் 10/2025 in அ.வ.எண்.120/2019**

S.K.ஜெகதீசன் (எ) S.K.ஜெகதீஸ்வரன் .... மனுதாரர்/ வாதி

/எதிர்/

1. சரவணன்
2. A.நஞ்சப்பன்
3. K.கந்தசாமி
4. செயல்அலுவலர், டவுன் பஞ்சாயத்து
   அரியப்பம்பாளையம் .... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இந்த மனுவானது 16.09.2025 அன்று என் முன்னிலையில் இறுதியாக விசாரணைக்கு வந்து மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.சுந்தரம் அவர்களும், 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.R.பாலசுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், 4-ம் எதிர்மனுதாரர் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.A.K.மதியழகன் அவர்கள் ஆஜராகியும், 2 மற்றும் 3-ம் எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், மனுதாரர் மற்றும் 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் எடுத்துரைத்த வாத உரையை கேட்டும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## பொதுவான உத்தரவு

இம்மனுவானது, மனுதாரர் தரப்பில் முடிக்கப்பட்ட மனுதாரர்/வாதி தரப்பு சாட்சியத்தை மறுதிறவு செய்யக்கோரியும் மற்றும் அரியப்பம்பாளையம் கிராம நிர்வாக அலுவலர், நில அளவையர் ஆகியோர்களுக்கு அழைப்பாணை அனுப்பி தாவா சொத்து சம்மந்தப்பட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்பிக்க உத்தரவிட வேண்டிமனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்.**

இம்மனுவின் மனுதாரர் / வாதியால், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மீது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 23.07.2025-ம் தேதியன்று மனுதாரர் தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சியம் விசாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டது. இந்நிலையில், பிரச்சனைக்குரிய இடமான, மனுதாரர் மற்றும் 1-ம் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு நடுவே உள்ள இடத்தை அளவீடு செய்த நிலஅளவையரை விசாரிக்க வேண்டியது அவசியமாக உள்ளது. மேலும், அரியப்பம்பாளையம் கிராம நிர்வாக அலுவலர் அவர்களையும் விசாரித்து, தாவா சொத்து சம்மந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே, கடந்த 04.08.2025-ம் தேதியன்று முடிக்கப்பட்ட விசாரணையை மீண்டும் மறுதிறவு செய்ய உத்தரவிட வேண்டியும், அரியப்பம்பாளையம் கிராம நிர்வாக அலுவலகருக்கு அழைப்பாணை அனுப்பி தாவா சொத்து சம்மந்தப்பட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்பிக்க உத்தரவிட வேண்டியும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-**

**2.1** மனுதாரர்களின் மனு மோசடியானது, சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் / வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில், இ.ம.எண்.2/2019-மனுவில் இடைக்கால உறுத்துக்கட்டளை மனுவில் உத்தரவிட்டதில் எதிர்மனுதாரர், மேற்படி இடைமனுவின் உத்தரவை நீக்கரவு செய்ய மனு செய்து, கடந்த 11.01.2021-ல் இடைக்கால உத்தரவு நீக்கரவு செய்யப்பட்டது. ஆணையர் மனுவான இ.ம.எண்.8/2024-ம் தாக்கல் செய்யப்பட்ட மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டதை தொடர்ந்து, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் CRP No.1436/2021, CMP No.11274/2021-ம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த 11.06.2025-ம் தேதியன்று மனுதாரர் / வாதி எதிர்மனுதாரர் சார்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டதில், சந்து எனக்கு பாத்தியப்பட்டதா என்றால் இல்லை என்று ஒப்புக்கொண்டுள்ளார்.

**2.2** 4-வது பாராவில், எனது சொத்தின் அத்து 3 1/2 அடி சந்து பொது சந்து என வருவாய் துறையில் உத்தரவு உள்ளதா என்றால், இல்லை என்றும், 9 வது பாராவில் பொது சந்து என விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால், சரிதான் என்றும், 10 வது பாராவில் என் பத்திரப்படி பாத்தியம் கேட்கிறேனா என்றால், பட்டா படி தான் பாத்தியம் கேட்கிறேன் என்றும், 11 வது பாராவில் எனது பத்திரங்கள் படியே 3 1/2 டி தாவா சந்து

எனக்கு பாத்தியப்பட்டதல்ல என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். மனுதாரர் தெளிவாக தாவா சந்து தமக்கு உரியதல்ல என்று ஒப்புக்கொண்டுள்ளார். ஆகவே, தாவாவின் தன்மையின் படி பட்டாவானது Title Deed ஆகாது என்ற கோட்பாடு படி அவசியம் இன்றி அரியப்பம்பாளையம் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையர் ஆகியோர்களை விசாரணை செய்யக் கோரி இருப்பது அவசியமற்றது. எனவே பலமுறை பல்வேறு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், எவ்வித முகாந்திரமும் இல்லாமல் தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்கத்தக்கதல்ல. எனவே, மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சி, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**5. தீர்வு**

**5.1** இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கானது, மனுதாரர் / வாதியால், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மீது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் வா.சா.1, வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு கடந்த 23.07.2025-ல் மனுதாரர் / வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. தாவா சொத்தான சந்து மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என நிரூபிக்க தாவா சொத்தை அளவை செய்த நில அளவையரை விசாரிக்கப்பட வேண்டும் எனவும், அவரால் கடந்த 06.05.2019-ம் தேதியிட்ட அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட அரியப்பம்பாளையம் கிராம நிர்வாக அலுவலரை விசாரணை செய்ய வேண்டியது அவசியம் எனவும், எனவே வாதி தரப்பு கூடுதல் சாட்சியம் விசாரிக்க வேண்டி இவ்வழக்கை, வாதி தரப்பு சாட்சியத்தை மீண்டும் மறுதிறவு செய்ய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5.2** எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரரால் அவசியமற்ற மனுக்கள் தாக்கல் செய்து இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், மனுதாரரை எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணை செய்யப்பட்டதில், மனுதாரர் / வாதி தனது குறுக்குவிசாரணையில், தெளிவாக தாவா சந்து தமக்கு உரியதல்ல என்று ஒப்புக்கொண்டுள்ள நிலையில், தாவா சொத்தின் உரிமையை நிரூபிக்க அரியப்பம்பாளையம் கிராம நிர்வாக அலுவலர், தாவா சொத்து சம்பந்தப்பட்ட அளவையரை

விசாரிக்க வேண்டியது அவசியம் இல்லை. எனவே, மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்யப்பட்டு, எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

**5.3** அசல் வழக்கானது மனுதாரர் / வாதியால் தாவா சந்து தனக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கேட்டும், அதை தொடர்ந்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது அசல் வழக்கு பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியத்திற்காக நிலுவையில் உள்ளது. தற்போது மனுதாரர் / வாதி தாவா சொத்து தனக்கு பாத்தியப்பட்டது என நிரூபிக்க அரியப்பம்பாளையம் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தாவா சொத்தை அளவை செய்த நிலஅளவையரை விசாரிக்க வேண்டியது அவசியம் எனவும், எனவே அசல் வழக்கில் மனுதாரர் / வாதி தரப்பு சாட்சியத்தை மீண்டும் திறவு செய்ய வேண்டும் என மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5.4** அசல் வழக்கானது தாவா சொத்து சம்மந்தமான உரிமை தொடர்பாக விளம்புகை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், மனுதாரர் / வாதிக்கு அவரது உரிமையை நிரூபிக்க உரிய வாய்ப்பு வழங்க வேண்டியது விசாரணை நீதிமன்றத்தின் கடமையாகும். இருப்பினும், மனுதாரரால் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட இழப்பீட்டை ஈடு செய்யும் வகையில், கீழ்க்கண்ட நிபந்தனையின் அடிப்படையில் இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது.

**இறுதியாக,**

**1) மனுதாரர் / வாதி இம்மனுக்களின் செலவுத்தொகையாக ரூ.1500/-ஐ 1-ம் எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு 17.10.2025-ம் தேதிக்குள் செலுத்த வேண்டும்.**

**2) தவறும் பட்சத்தில் இம்மனுக்களானது மேற்கொண்டு எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படாமல் தள்ளுபடி செய்யப்படும்**

**மீண்டும் அழைக்க 17.10.2025**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 08-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.10.08 04:21:23 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

**சத்தியமங்கலம்.**

இருதரப்பிலும் சாட்சி, சான்றாவணங்கள் தாக்கல் இல்லை.

SELVAM SUSILA Digitally signed by SELVAM SUSILA Date: 2025.10.08 04:21:30 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சத்தியமங்கலம்.